2015 செப்டம்பர் 15]

வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு விதிகள் இடம் தரவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராம்பட்டு மின் வாரியப் பிரிவு அலுவலகமே அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். வாரிய விதிகளுக்கேற்ப எதிர்காலத்தில் அங்கு மின்மாற்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், தேவை ஏற்படின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

259—

மரக் கன்றுகள் நடுதல்

***52332—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியிலுள்ள நெடுஞ்சாலை ஓரங்களில் மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

புவனகிரி தொகுதியிலுள்ள நெடுஞ்சாலையின் ஓரங்களில் மரக் கன்றுகள் நடப்பட வேண்டிய சாலைப் பகுதியில் மரக் கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 செப்டம்பர் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதர்மத்தை அழித்திட, அண்டியவருக்கு நிழல் அளிக்கும் ஆல்போல், கதியென கை தொழுவோருக்கு, கண நொடியில் கலி தீர்த்திடும் ஈகைத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பும் திசையெல்லாம் காவல் தெய்வமாய் நிற்கும் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மண் வளத்தைப் பாதுகாக்கவும், ஊரகப் பகுதிகளைப் பசுமைமயமாக்கும் வண்ணம், ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், நெடுஞ்சாலைகள் ஆகிய சாலைகளின் இருமருங்கிலும் மரக் கன்றுகளை நடும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும்வகையில், தனி நபர் இல்லந்தோறும் பலன் தரும் பழமரக் கன்றுகள் மற்றும் இதர மரக் கன்றுகளை வளர்த்திட வழிவகை செய்யப்படும் எனவும் அறிவித்து, அதன்படி ஒவ்வொரு இல்லத்திற்கும் நான்கு மரக் கன்றுகளை வழங்கி, நடுவதற்கு ஊக்குவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதியில் நெடுஞ்சாலை ஓரங்களில் மரக் கன்றுகளை நடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதியில், பரங்கிப்பேட்டை-விருத்தாசலம் சாலையை இருவழிச் சாலையாக விரிவாக்கம் செய்வதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ள நிலையில், அந்தச் சாலைகளின் இருமருங்கிலும் உள்ள புளிய மரங்கள் மற்றும் இதர மரங்கள் வெட்டப்படவுள்ளன. இச்சாலையின் விரிவாக்கப் பணிகள் முடிவடைந்தவுடன், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில், மீண்டும் இருபுறங்களிலும் மரக் கன்றுகளை நடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையில் சாலைகளை அகலப்படுத்தும் பணியின்போது, மரங்களை அப்புறப்படுத்துவதைத் தவிர்க்க முடியாது. இதனை ஈடு செய்யும் பொருட்டு, வெட்டப்படும் ஒரு மரத்திற்குப் பதிலாக பத்து புதிய மரக் கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு மரங்கள் வளரும் வரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், உலகம் வெப்பமயமாதலைத் தடுக்கவும் சாலையோரங்களிலும் மற்றும் அலுவலக வளாகங்களிலும் நெடுஞ்சாலைத் துறையினரால் மரக் கன்றுகள் நடப்படுகின்றன. புவனகிரி தொகுதியில் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் 950 மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரங்கிப்பேட்டை-விருத்தாசலம் சாலையில் மரக் கன்றுகள் நடப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். எதிர்வருங்காலங்களிலே சாலையோரங்களிலே மரக் கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதோடு, புதுச்சத்திரம்—பரங்கிப்பேட்டை சாலை, புவனகிரி-குறிஞ்சிப்பாடி சாலை, சிதம்பரம்—வீராணம் ஏரிக்கரை சாலை வழி கீழ்நத்தம்-கீரப்பாளையம்-சேத்தியாதோப்பு ஆகிய சாலைகளில் மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள அத்துணை நெடுஞ்சாலைகளிலும் மரக் கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையால் சாலைகள் மேம்படுத்தப்படுகிறபோது அந்தத் தார் சாலைக்கு இருப்புறத்திலும் இருக்கிற மண் சாலை பள்ளமாக உள்ளது. அதை அப்படியே விட்டு விடுகிறார்கள். அதனாலே பல நேரங்களிலே விபத்துகள் ஏற்படுகின்றன. அதை செம்மண் போட்டு சரி செய்வதற்குப் பதிலாக சில இடங்களில் பக்கத்திலே இருக்கிற மண்ணையே போட்டு மூடிவிட்டுச் செல்கிற நிலைமைதான் ஏற்படுகிறது. இதனால் வாகனங்கள் மழைக் காலங்களிலே சாலையை விட்டுக் கீழே இறங்குகிறபோது சரிந்து விழுகிற நிலைமை ஏற்படுகிறது. எனவே, சாலைகளை மேம்படுத்துகிறபோது பக்கத்திலே இருக்கிற மண் சாலைக்கும் தார்ச் சாலைக்கும் இடையே அதிக மேடு பள்ளம் இல்லாமல், செம்மண் கொட்டி அதைச் சரிப்படுத்துகிற பணியை அரசு மேற்கொள்ள முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலைகளை அமைக்கின்றபோது அதனை ஒட்டிய பகுதிகளில் இருக்கின்ற மண் சாலைத் தாழ்வாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். அதனால் விபத்துகள் ஏற்படுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மண் கொட்டி, நிரவி மண் சாலையையும் சமப்படுத்துகின்ற அந்தப் பணிக்கும் சேர்த்துத்தான் இப்போது டெண்டர் விடப்படுகின்றது. ஆகவே, சாலைகளைச் சீரமைக்கின்றபோதும், புதிய தார்ச் சாலைகளை அமைக்கக்கின்றபோதும் மண்ணைக் கொட்டி நிரவி பக்கத்தில் இருக்கும் மண் சாலையையும் சமப்படுத்துகின்ற பணியை மேற்கொள்வதற்கும் சேர்த்துதான் டெண்டர் விடப்படுகின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

2015 செப்டம்பர் 15]

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலிருந்து விருத்தாசலம் வழியாக சென்னைக்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படுமென்று மத்திய அரசு 4 வருடங்களுக்கு முன்பாக அறிவித்தார்கள். இப்போது அதனுடைய நிலைப்பாடு என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா மரக் கன்றுகள் நடப்படுவதைப் பற்றியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சையிலிருந்து விருத்தாசலம் வழியாக சென்னைக்கு செல்லும் சாலையைப் பற்றி இங்கே கேட்டிருந்தார்கள். இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்றது. ஆகவே, இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்து, துரிதமாகப் பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர்-விருத்தாசலம் சாலை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அந்தப் பணிகள் எல்லாம் முடிந்தபின்பு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

261—

அங்கன்வாடி கட்டடம்

***52900—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—